# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.63/மா/2022**

**நாள். 26.07.2022**

திரு. R. மயில்சாமி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5-ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 26.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.05.2022–ல் பெறப்பட்டு 63/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 26.05.2022 நாளிட்ட தனது மனுவில் :

"நான் கடந்த 28.12.2020-ஆம் தேதியில், மதுரை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு (GDP) இணைய வழியில் கோரிக்கை மனு அனுப்பி இருந்தேன். அம்மனுவில் எங்கள் பகுதியான புதுவிளாங்குடி பழைய வார்டு எண்.23, தற்போது புதிய வார்டு எண்-1, பழைய மண்டலம் 1 தற்போது புதிய மண்டலம் எண்.2, (வடக்கு மண்டலம்) புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவில் (4வது தெரு) சாலை குண்டும் குழியும் உள்ளதால், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும், நடந்து செல்வதற்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. மேலும் இரண்டு சக்கர வாகனத்தில் செல்லும் போது மழை காலங்களில் வழுக்கி விழுவதுடன் வாகனத்தில் மட்கார்டு இரண்டிலும் களிமண் பிடித்து கொண்டு வாகனத்தை ஓட்டமுடியவில்லை. எனவே பொது மக்கள் நலன் கருதி சுமார் 200 மீட்டர் தொலைவிற்கு சாலை (Road) அமைத்து தருமாறு கோரிய மனு மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டது. எனது மனுவின் கோரிக்கை ஏற்கப்பட்டது. அங்கு பாதாள சாக்கடை வேலை முடிந்தவுடன் சாலை (Road) போட்டுத் தரப்படும் என்று இணையவழியில் மட்டும் எனக்கு

மாநகராட்சியால் தகவல் வழங்கப்பட்டது. ஆனால் கடிதம் மூலம் இன்றுவரை எனக்கு உதவி ஆணையர் மண்டலம் -2, தெரிவிக்கவில்லை. மேலும், 200 மீட்டர் தூரம் சாலையில் 130 மீட்டர் தூரம் வரை பாதாள சாக்கடை 7 மாதங்களுக்கு முன்னர் பணி முழுமையாக முடிக்கப்பட்டது. ஆனால், மீதம் உள்ள 70 மீட்டர் தூரத்திற்கு மட்டும் இன்னும் பாதாள சாக்கடை அமைக்கவில்லை. இது ஒருதலைபட்சமாகும். இருப்பினும், 130 மீட்டர் தூரத்திற்கு பாதாள சாக்கடை பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளதால் முதலில் அதற்கு மட்டும் தார் சாலை விரைவாக அமைத்தும் மீதமுள்ள 70 மீட்டர் தூரத்திற்கு விரைவாக பாதாள சாக்கடை அமைத்து தர வேண்டியும், சுமார் 1½ வருட காலமாக பொது மக்கள் நலன் காணாமல் மெத்தனபோக்காகவும், எனக்கு இதுவரை கடிதம் மூலம் தகவல் வழங்காமலும், பாதாள சாக்கடை மற்றும் சாலை (Road) போட முயற்சிகளை மேற்கொள்ளாமலும் இருந்து வரும், தற்போதைய புதிய மண்டலம் -2, உதவி ஆணையர் அவர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர் (AE) அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்குநடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தும் விடுபட்ட 70 மீட்டர் தூரத்திற்கு விரைவாக பாதாள சாக்கடை அமைத்தும் முதலில் 130 மீட்டர் தூரத்திற்கு சாலை (Road) போட்டுதர உத்தரவிடுமாறு மாண்புமிகு நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.07.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.07.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் 12.7.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி, புதுவிளாங்குடி பழைய வார்டு எண்.23, தற்போது புதிய வார்டு எண்.1, பழைய மண்டலம்-1, தற்போது புதிய மண்டலம் எண்.2, (வடக்கு மண்டலம்) புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு (4வது தெரு)வில் சாலை குண்டும் குழியுமாக உள்ளதால், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் நடந்து செல்வதற்கு மிகவும் கடினமாக உள்ளது. மேலும், மழைக்காலங்களில் பொது மக்கள் இரண்டு சக்கர வாகனங்களில் செல்லும் போது வழுக்கிவிழுகின்றனர்.

மேற்கண்ட இடத்தில் 200 மீட்டர் நீளத்திற்கு மாநகராட்சியால் சாலை போட வேண்டும். 130 மீட்டர் தூரத்திற்கு 50 மீட்டர் மட்டுமே பாதாள சாக்கடை போடப்பட்டது. ஆனால், எனது அய்யப்பன் தெருவில் 70 மீட்டர் முதல் 90 மீட்டர் பாதாளச் சாக்கடை போடப்படவில்லை. எனவே, மேற்கண்ட சாலைப் பணி மற்றும் பாதாளசாக்கடைப்பணியை விரைவில் முடித்திடவும் மற்றும் பாதாளச் சாக்கடை பணியை முடிக்கத் தவறிய மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் விரைவாக பாதாள சாக்கடை பணியை முடித்திட ஆவன செய்யுமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

4. மதுரை மாநகராட்சி வடக்கு மண்டல உதவிப்பொறியாளர் 12.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள தெருக்களில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மற்றும் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகள் முடிவுற்ற பின்பு தார்ச்சாலைகளை புதுப்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5.** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி உதவிப்பொறியாளர் அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன :

மனுதாரர் தனது மனுவில் அய்யப்பன் தெருவில் 200 மீட்டர் தூரம் வரையில் குண்டும் குழியுமாக உள்ளதால் வாகன ஓட்டிகளுக்கும், நடந்து செல்பவர்களுக்கும் இடையூராக உள்ளது. அந்த 200 மீட்டர் சாலையில் 130 மீட்டர் தூரம்வரை பாதாள சாக்கடை பணி நிறைவடைந்து பணி முழுமையாக முடிக்கப்பட்டு 7 மாதங்கள் ஆகிறது என்றும் மீதமுள்ள 70 மீட்டர் தூரத்திற்கு இன்னும் பாதாள சாக்கடை அமைக்கவில்லை என்று தெரிவித்து மீதமுள்ள 70 மீட்டர் தூரத்திற்கான பாதாள சாக்கடை பணியை விரைவாக முடித்துத் தரவும் முதலில் 130 மீட்டர் தூரத்திற்கான தார் சாலையை போட்டுத் தர உத்தரவிடுமாறும் இதில் மெத்தனமாக செயல்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

**6.** அரசு, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல்வேறு நலத்திட்டங்களை அனைத்து துறைகளிலும் பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறது. அவ்வாறு முன் எடுத்து செய்து வருகின்ற நிலையில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் இதுபோன்ற அவசியமான அடிப்படையான வசதிகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து பெறப்படும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்து மக்களின் குறைகளை நிவர்த்தி செய்தால்தான் அரசுக்கும் மாநகராட்சிக்கும் எந்த களங்கமும் ஏற்படாமல் நற்பெயர் கிட்டும் என்பதை அலுவலர்கள் உணர்ந்து தங்கள் கடமையை சீரிய முறையில் ஆற்றிட வேண்டும்.

**7.** மேலும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் இதுபோன்ற அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனுக்குடன் நிறைவேற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**8.** மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் உதவி பொறியாளர் தமது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள தெருக்களில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மற்றும் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகள் முடிவுற்ற பின்பு தார்ச்சாலைகளை புதுப்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். மனுதாரரால் 28.12.2020 ம் தேதியில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு (GDP) இணைய வழியாக கோரிக்கை அனுப்பப்பட்டு, 07.01.2021ம் தேதியில் மாநகராட்சி ஆணையராலும், 08.01.2021 அன்று சிறப்பு துணை ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை அவர்களால் மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண் 23–ல் உள்ள செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றபின் சாலை சீர் செய்யப்பட உள்ளது என தெரிவிக்கப்பட்டு 16 மாதங்கள் கடந்த நிலையிலும், 200 மீட்டர் சாலையில் 130 மீட்டர் தூரம் வரை பாதாள சாக்கடை பணி நிறைவடைந்து, 70 மீட்டர் தூரத்திற்கு பாதாள சாக்கடை பணி மேற்கொள்ளாதது மிகவும் கண்டிக்கத்தக்கது.

**9.** எனவே குறிப்பிட்ட காலகெடுவுக்குள், பொதுமக்களின் அடிப்படை தேவையான சாலை வசதியை ஏற்படுத்தி தராத மதுரை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும் என்று இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும் பொதுமக்கள் புகார் மனு அளித்த பிறகே பொதுமக்களின் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும் என்பது மாநகராட்சி நிர்வாகத்திற்கு அழகல்ல. இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இக்காலதாமதத்திற்கு காரணமான அனைத்து கள அலுவலர்கள் மீதும் நடைமுறையில் உள்ள சட்ட விதிகளின்படி துறை ரீதியான உரிய ஒழுங்கு நடவடிக்கை

மேற்கொள்ள மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் உதவி பொறியாளர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரர் குறிப்பிட்டுள்ள தெருக்களில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மற்றும் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகளை துரிதமாக முடித்து அப்பணிகள் முடிவுற்ற பின்பு தார் சாலைகளை புதுப்பிக்க உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்திட மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

This again is the lapse of the local field level officers of the **Corporation who** have left out a portion of 70 meters from under ground drainage scheme **for reasons** best known only to them. The left over work of the sewerage/drainage **should be** completed within 30 days and a road should be laid within **20 days after the drainage** work execution. These are basic amenities provided **by any local body to its** residents. Delay and lethargy in the matter can not be condoned or compromised. The Corporation Commissioner, Madurai is directed to ensure compliance with the orders of the Forum besides launching disciplinary action against the delinquent officials responsible for the inordinate delay, inaction and .stupor. Such acts by the field officials bring bad name to the Corporation's image and ultimately to the Local Administration by the Tamil Nadu Government that is doing its best to serve the common man with total passion and dedication.

**2022**-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் **26**-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   மனை எண்.5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர்,
   புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையாளர்,
   மதுரை மாநகராட்சி, மதுரை.
3. உதவி ஆணையர்,
   மண்டலம் - 02, மதுரை மாநகராட்சி,மதுரை.
4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

26/7/22

செயலாளர்